# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 30 திங்கட்கிழமை (14-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 222

# வன்னிப் படையினரை பலப்படுத்த அவசரமாக ஆயுதம் கொள்வனவு!

## முழு ஏற்பாட்டுடனே அடுத்த நகர்வு

கொழும்பு, ஜூலை 14

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் பாதுகாப்பு அமைச்சால் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனாவில் இருந்து ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று கொழும்பு வந்துள்ளது.

மேலும் எதிர்வரும் வாரங்களில் சீனா, ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளில் இருந்து மேலும் ஆயுதக் கப்பல்கள் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



அப்ப கடைசியில பழி சீனா மீது விழுந்து போச்சுப் போல......!

## சீனாவிலிருந்து தரம் குறைந்த ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள்!

### திருப்பி அனுப்ப நடவடிக்கை!!

கொழும்பு, ஜூலை 14

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கிகளுக்குப் பாவிக்கும் ரவைகள் தரம் குறைந்தவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ரவைகளைத் திரும்பவும் சீனாவுக்கு அனுப்ப முயற்சி எடுக்கப்படுகிறது

ரி-56 ரக துப்பாக்கிகளுக்குப் பாவிக்கும் ரவைகள் ஆயிரம் மீற்றர் தூரம் வரை சென்று தாக்கக் கூடிய திறன் கொண்டவை என்றும் —

அத்தகைய ரவைகளே தற்போதைய இராணுவ நடவடிக்கைக்குத் தேவையாக உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்சமயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள ரவைகள் 300 மீற்றர் தூரம் வரையே செல்லக் கூடியவை. அத்துடன் எதிரியைத் தாக்கும் திறனும் அற்றவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இவற்றைத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (இ-3-150)

## வீட்டில்தனியே இருந்தமாணவி மீது ராணுவ சிப்பாய்பாலியல் வல்லுறவு

### அராலி தெற்கில் வெள்ளியன்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பாடசாலை மாணவி ஒருவர் வீட்டில் தனியாக இருந்த வேளை, அங்கு சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவரினால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம், அராலி தெற்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகலில் இடம்பெற்றுள்ளது.

பதினேழு வயதான இந்த மாணவி தமது வீட்டுக்கிணற்றில் குளிப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தவேளையிலேயே சிப்பாயினால் கெடுக்கப்பட்டார் என்று அறியவருகிறது.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அராலிச் சம்பவம் குறித்து ராணுவ அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

அராலியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் குறித்து அச்செழுவில் உள்ள 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எப். பி. பலகல்லே கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அராலிக்கு அருகில் உள்ள இராணுவ முகாம் ஒன்றைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர், அந்தப் பகுதியில் உள்ள இளம் பெண் ஒருவரிடம் சிநேகிதமானார். இம் மாதம் 11 ஆம் திகதி அந்த இளம் பெண்ணின் வீட்டுக்குச் சென்ற சம்பந்தப்பட்ட சிப்பாய், பெண்ணை பாலியல் ரீதியாக மானபங்கம் செய்தார்.

பாதிக்கப்பட்ட பெண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் காவல் நிலையம் மீது மட்டக்களப்பில் தாக்குதல்!

### ஆயுதம் அபகரிப்பு; கட்டடத்துக்கு தீ

மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட எல்லைப்பகுதியில் அமைந்துள்ள சின்னவத்தை பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு 12-30 மணியளவில் தாக்குதல் நடத்தினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மெய்வன்மைப் போட்டிகள் வவுனியாவுக்கு இடம் மாற்றம்

### 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடக்கும்

திருகோணமலை, ஜூலை 14

வடக்கு—கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவிருப்பதாக வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இப் போட்டிகள்—

இன்றும், நாளையும் திருகோணமலையில் நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி விமானம் மயிரிழையில் தப்பியது

கொழும்பு, ஜூலை 14

அநுராதபுரத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 'சியாமாசெட்டி' விமானம் ஒன்று விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் விமானத்தின் மூக்குப் பகுதியும், ''பிறப்புளரும்'' சேதமடைந்தன.

பயிற்சி விமானியும், பயிற்சியாளரும் காயம் எதுவும் இன்றித் தப்பிக் கொண்டனர்.

இந்த விமானத்தின் சேதத்தைத் திருத்த விமானத்தின் மொத்தப் பெறுமதியின் மூன்றில் ஒரு பங்கு பணம் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ-3-150)

## இலங்கையில்இனப்போர்நடப்பது குறித்து எமக்கு எதுவும்தெரியாது

### விடுதலையான கொரிய கப்பல் கப்டன் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 14

''நாம் புலிகளிடம் கைதாகும் வரை இலங்கையில் இனப்போர் ஒன்று நடப்பது குறித்து எமக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை.''

புலிகளால் கடத்தப்பட்ட ''மொறாங் பொங்'' கப்பலின் கப்டன் கன்சிங்கும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கப்பலின் மாலுமிகள் விடுதலை செய்யப்பட முன்னர் விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து நிகழ்ச்சியில் வவுனியா செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் சிவநாதன் கிஷோரும் கலந்து கொண்டார்.

அவரிடமே வடகொரிய கப்பல் கப்டன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கப்பல் கடத்தப்பட்டமை தொடர்பாக வடகொரிய கப்பல் கப்டன் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் பிரச்சினை ஒன்று நடக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கவில்லை.

எமது கப்பல் கொழும்பு நோக்கிச்சென்று கொண்டிருந்த சமயம் ஆயுதக் கோஷ்டி ஒன்று எமது கப்பலை மறித்தது.

கரையில் எமது கப்பலைக் கட்டி விட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

கடற்கொள்ளையர்கள் தான் எம்மைக் கடத்திவிட்டார்கள் என்று கருதி நாம் புறப்படத் தயாரானோம்.

அப்போது கப்பலை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## இந்துமத குருமார் ஒன்றியம்

மேற்படி அமைப்பின் முயற்சியால் இந்து மத குருமார்களுக்கு விசேட அடையாள அட்டைகள் சகல பிரதேச சபைகளாலும் வழங்கப்பட உள்ளன. படிவங்களைப் பெற்று சிவாச்சாரியலட்சணத்துடன் கூடிய போட்டோ பிரதிகள் (2½X2 வர்ணம்) சேர்த்து விண்ணப்பிக்கவும்.

முக்கிய குறிப்பு:-

விசேட பொதுக்கூட்டம் 23 — 7 — 97 புதன் கிழமை பிற்பகல் 1. 00 மணிக்கு நீராவியடி நாவலர் மண்டபத்தில் நடைபெறும். அந்தணப் பெருமக்கள் தவறாது சமுகம் தரவும்.

உப செயலாளர்
இந்துமத குருமார் ஒன்றியம்.

(48391)

---

பரீட்சைக்குத் தயாராகும்
மாணவர்களுக்காக

**மாதிரி வினாக்கள் - விடைகளுடன்**

- ★ G. C. E. A/L '97 — கணித — உயிரியல் — கலை வர்த்தகம்
- ★ புதிய பாடத்திட்டம் ★ பழையபாடத் திட்டம் அரசாங்க Model Paper களும் பெறலாம்
- ★ ஆண்டு 5 — புலமைப் பரிசில் '97 மாதிரிப் பயிற்சிகள் — ஊக்குவிப்புப் பயிற்சிகள்
- ★ இரண்டாம் தவணைப் பரீட்சைக்கான 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L எல்லாப்பாடங்களும்

**14—07—97** திங்கள் முதல் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி
**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(48387)

---

யா| தேவரையாளி இந்துக் கல்லூரி

## பரிசளிப்பு விழா 1997

**காலம்:-** 14-07-1997 திங்கள் காலை 9. 30 மணி
**இடம்:** கல்லூரி அரங்கு

முதன்மை விருந்தினர்
சிரேஷ்ட பேராசிரியர் வ. ஆறுமுகம்
(தலைவர், கல்வியியற்றுறை, யாழ்; பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்குநர்
திருமதி செல்வராணி ஆறுமுகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந் நிகழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(48386)

---

### வெளியீடு

சுழிபுரம், ஜூலை 14

அபிராமியந்தாதி ஆய்வுரை வெளியீட்டு வரிசையில் 95 ஆவது, 96 ஆவது பாடல்களுக்குரிய வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும். (இ-28)

### விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

குடிதண்ணீர் எடுக்கச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு படுகாயமடைந்தார்.

வேலணை கிழக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிவபாலன் சசிகலா (வயது - 28) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

தண்ணீர் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படும் இப்பகுதியில் குடி தண்ணீரைப் பெறுவதற்காக வீதிக்கு வந்த சமயமே மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதாக தெரிவிக்கப்பட்டது. (இ-15)

---

எமது
புதிய வெளியீடு!
டாக்டர் ராஜசேகர்
நடித்த
**ஓம்**
புதிய பாடல் 28
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(48384)

---

### வகுப்புக்கள்

தலைமுடி அலங்காரம்
கேக் ஐசிங்
பூ வேலைகள்
சிற்றுண்டி வகைகள்

**1997-07-14** ஆம் திகதி இன்று பி. ப. 2. 30-க்கு ஆரம்பமாகின்றன.

இடம்:
335/5, பலாலி றோட்,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(48588)

---

### கல்லூரி நிறுவுனர் தினம்

மானிப்பாய் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு தினமும் அண்மையில் சிறப்பாக நடைபெற்றன. கல்லூரி அதிபர் செ. கேசவராஜன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக யாழ். வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி இ. வசந்தசேனன் கலந்து கொண்டு கல்லூரியின் நிறுவுனர் நினைவு உரையை நிகழ்த்தினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஐ-135)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் சரஸ்வதி 12- 07- 1997 இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் புஸ்பவதி, காலஞ்சென்ற திலகவதி, மகேஸ்வரி, குகனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வாமதேவன் (கல்வித்திணைக்கள லிகிதர்), நாகராசா (கனடா), வேதாரணியம் (யோகாஸ்), ஸ்ரீஸ்கந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசம்மா, இராசையா (சிங்கப்பூர்) ஆகியோரின் சகோதரியும் திருமதி சியாமளா மோகனகுமார் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), சியாதா (ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), காந்தரூபன் (கனடா), குமுதினி (கனடா), திருமதி சயந்தினி ரவீந்திரவரதன் (நோர்வே), திருமதி சிவதக்சினி பாஸ்கரன் (லண்டன்), சுவேந்திரராணி (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்), சிவாஜினி (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்), ஸ்ரீகரன், சுதாகரன் (லண்டன்), ஸ்ரீஜெனனி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி 99 ஆண்டு), திருமதி சு.மனோகரி(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தக்சா (கனடா), சூரியமோகன் (லண்டன்), பிரியந்தி (லண்டன்), அமிர்றா (லண்டன்), அனிர்றா (லண்டன்), நவினா (நோர்வே) ஆகியோரின் பூட்டியும் மற்றும் காலஞ்சென்ற அருளானந்தம், கனகரட்ணம், திருமதி ச. பரமேஸ்வரி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14- 07- 1997 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராயில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேதாரணியம்
(மருமகன்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(48390)

## சின்னத்தம்பி கார்த்திகேசு

(ஓய்வுபெற்ற ஆஸ்பத்திரி ஊழியர்)

அரியாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி கார்த்திகேசு 13 - 07 - 97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி, பொன்னு ஆகியோரின் அன்பு மகனும், தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும், தர்மகரசியின் (சித்திரா) அன்புத் தந்தையாரும், கருணாகரனின் (கல்வித் திணைக்களம், வலயம் II) அன்பு மாமனாரும், மரூஜனா, சுகிர்தனா, ஜனார்த்தனா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14 - 07 - 97 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிங்கராஜா
(பெறாமகன்)

107, கனகரத்தினம் றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(48385)

## வைரமுத்து இரத்தினம்

(ஓய்வுபெற்ற அரச கணக்காய்வாளர் -
பன்னாலை, தெல்லிப்பழை)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து இரத்தினம் அவர்கள் 09-07-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சயம்புநாதர் வைரமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், முருகையா, காலஞ்சென்ற திருமதி இராசம்மா பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் மக்களான காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, சின்னத்தம்பி, காலஞ்சென்ற செல்லையா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இங்கிலாந்தை வதிவிடமாகக் கொண்டவர்களான பத்மநாதன், இராமநாதன், லோகநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாசுகி, விஜயலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13-07-97) ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
அ. இலங்கைநாயகம்
(மைத்துனர்)

நவாலி வடக்கு, நவாலி.


Mrs. R. Selvanayaki,
3 the Orchard Wickford,
Essexss 12 Ohb,
England.

(48383)

---

# நினைவஞ்சலி

ஓராண்டு — ஒன்பதாம் மாதம்



அமரர்
**செ. சிவக்கொழுந்து**
(இளைப்பாறிய ஆசிரியர்)
மலர்வு:- 1935 - 09 - 22
உதிர்வு:- 1996 - 07 - 24



அமரர்
**செல்வி சி.சிவராஜி**
(மாணவி)
மலர்வு:- 1984 - 07 - 26
உதிர்வு:- 1996 - 10 - 22

**திதி - 1997 - 07 - 14**

அன்பால் அரவணைத்த அறிவுத் தெய்வமே!
உன்நினைவால் வாடுகின்ற எமை நீத்து
ஈன்றெடுத்த மகளையும் இன்பமுடன் அரவணைத்து
வான் புகுந்து ஆண்டொன்றாகுதையா!
உம் ஆத்மா இறையடி சேர்ந்திட என்றும்
எம் கரம் கூப்பிப் பிரார்த்திக்கின்றோம்.

''மணி பல்லவம்'',
ஒட்டுவெளி, மிருசுவில்.

குடும்பத்தினர்
(48380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் ஜனாதிபதித் தேர்தல்; வாக்களிப்பு இன்று நடைபெறும்

## கே. ஆர். நாராயணன் வெற்றி பெறுவார்

புதுடில்லி, ஜூலை 14

இந்தியாவின் 11 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்திலும், 25 மாநிலங்களின் தலை நகரங்களிலும், டில்லி மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் இன்று முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணிவரை வாக்களிப்பு நடைபெறும்:

தற்போதைய உப ஜனாதிபதி கே. ஆர்.நாராயணனும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் ரீ.என்: சேஷனும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஆளும் ஐக்கிய முன்னணி, பாரதீய ஜனதாக்கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் உட்பட முக்கியமான பல அரசியல் கட்சிகள் இத்தேர்தலில் நாராயணனை ஆதரிக்கின்றன.

இந்து தேசிய வாதக் கட்சி சிவசேனையும் மற்றும் சில சுயேட்சைகளும் ரீ.என் சேஷனை ஆதரிக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி டாக்டர் சங்கர்தயாள் சர்மாவின் பதவிக்காலம் எதிர் வரும் 24 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. புதிய ஜனாதிபதி மறு நாள் 25ஆம் திகதி பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குப் பெட்டிகளும், வாக்குச் சீட்டுக்களும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இத் தேர்தலில் கே:ஆர் நாராயணனின் வெற்றி ஏற்கனவே நிச்சயமாகி விட்டிருப்பது குறிப்பிடத்தக்கது: (ஐ)

★ 30 ஆண்டுகளின் பின்னர்

# சேகுவேராவின் எலும்புக்கூடு கியூபா வந்து சேர்ந்தது!

## இராணுவ மரியாதையுடன் பொறுப்பேற்பு

ஹ ானா ஜூலை 14

லத்தீன் அமெரிக்காவின் புரட்சித் தலைவர் ஏர்னெஸ்ரோ சேகுவேராவினுடையது என நம்பப்படும் சடலம் நேற்று பொலீவியாவில் இருந்து கியூ பாவுக்கு எடுத்து வரப்பட்டது.

சேகுவேராவின் எலும்புக் கூடான சடலத்தை ஏற்றிவந்த இராணுவ விமானம் கியூபத் தலைநகர் ஹவானாவுக்கு அருகே உள்ள இராணுவத்தளத்தில் வந்து இறங்கியபோது அங்கு பூரண இராணுவ மரியாதை செலுத்தும் வைபவம் இடம்பெற்றது

சேகுவேராவின் விதவை மனைவி மற்றும் அவரது உறவினர்கள், கியூப அதிபர் பிடல் காஸ்ரோ உட்பட பல உயர் அதிகாரிகள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

கியூபாவின் விடுதலைக்காக 1950ஆம் ஆண்டுகளில் போராட்டம் நடத்திய ஏர்னெஸ் ரோ சேகுவேரா அந்நாட்டு மக்களால் மிகவும் மதிக்கப்பட்ட கெரில்லா தலைவராவார்.

பொலீவியாவில் கெரில்லா போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை - சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் - பொலீவிய அரசபடையினராலும் அமெரிக்காவின் சீ. ஐ, ஏ கூலிப்படையினராலும் சேகுவேராவும் அவரது சில சகாக்களும் கொல்லப்பட்டனர்.

அவர் இறந்து 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பொலீவியாவில் உள்ள ஒரு நகரில் இருந்து சேகுவேராவினது என நம்பப்படும் எலும்புக் கூடு அண்மையில் மீட்கப்பட்டது.

'கைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட அந்தச் சடலம் சேகுவேராவினுடையது தான் என லிபிய மற்றும் ஆஜென்ரீன மனிதவியல் நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். (ஐ)

# றணரித்தின் ஆதரவாளர்கள் கம்போடியாவில் கொலை?

லண்டன், ஜூலை 14

கம்போடியாவில் புதிய ஆட்சியாளர்கள் அரசியல் எதிரிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

வெளியேற்றப்பட்ட முதலாவது பிரதமர் இளவரசர் றணரித்தின் சிரேஷ்ட ஆதரவாளர் ஒருவர் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் கொல்லப்பட்டார் என்றும் இதுவரை ஐவர் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபையை மேற்கோள்காட்டி 'லண்டன் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டது:

றணரித்துக்கு ஆதரவான நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், அதிகாரிகளும் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது: (ஐ)

# அணிசேரா நாடுகளின் கூட்டத்தில் சியராலியோனுக்கு இடம் இல்லை

லண்டன், ஜூலை 14

அணிசேரா நாடுகளின் எதிர்காலக் கூட்டங்களில் கலந்துகொள்ள சியராலியோனுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது:

லண்டனில் நடந்த அணிசேரா நாடுகளின் அமைச்சர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

சியராலியோனில் அண்மையில் இடம்பெற்ற திடீர் சதிப் புரட்சியை அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் கண்டித்தனர்.

தேர்தல் மூலம் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் முன் நிபந்தனைகள் எதுவும் இன்றி மீண்டும் பதவியில் அமர்த்தப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

உலக அரங்கில்

## போலந்தில் வெள்ளம்

போலந்தில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளத்தில் இதுவரை 23 பேர் இறந்துவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

வெள்ளத்தால் 50 நகரங்களும், 300 கிராமங்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆயிரக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

நிவாரணப் பணிகளுக்காக ஒரு லட்சம் டொலர் பண உதவியை அமெரிக்க அதிபர் கிளின்ரன் போலந்து நாட்டுக்கு வழங்கியுள்ளார். (ஐ-5)

## ஹுன் சென் எச்சரிக்கை

கம்போடியாவின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ. நா. தலையிடக் கூடாது என்று கம்போடியாவில் ஆட்சியில் உள்ள இரண்டாவது பிரதமர் ஹுன் சென் கூறியுள்ளார்:

கம்போடிய நெருக்கடி தொடர்பாக ஐ. நா. பாதுகாப்புச்சபை வெளியிட்ட கருத்துகளுக்கு பதிலளிப்பது போன்று ஹுன்சென் இவ்வாறு கூறியுள்ளார். (ஐ)

தேவைக்கு அதிகமான அளவில்

# மண்எண்ணெயை வாங்கி வீணே சேமிக்கவேண்டாம்என அறிவுறுத்து

திருநெல்வேலி, ஜூலை 14

வர்த்தக நோக்கில் மண்எண்ணெய் வாங்குவதற்கு வரும் எவருக்கும் மண்எண்ணெய் விநியோகிக்க வேண்டாம் என்று யாழ்: மாவட்டத்திலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முவர்களுக்கும் கண்டிப்பான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ். சிவஞானம் இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதே வேளை பொதுமக்கள் தங்கள் கூட்டுறவு சங்க பங்கீட்டு அட்டையை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சமர்ப்பித்து ஏழு நாள்களுக்கு ஒருமுறை ஐந்து லீற்றர் மண்எண்ணெயை தங்கள் வீட்டுத் தேவைக்கு பெற்றுக்கொள்ளலாம் என்றும் தனியார் கடைகளில் கூடுதல் விலை கொடுத்து மண்எண்ணெயை வாங்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட மண்எண்ணெய், டீசல் என்பன யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது: ஆகவே தட்டுப்பாடு எதுவும் தற்போது இல்லை என்றும் தேவைக்கு அதிகமாக சிலர் வாங்கி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த முற்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## விவேகானந்தர் நூற்றாண்டு விழா

திருநெல்வேலி, ஜூலை 14

இணுவில் இந்துக் கல்லூரி இந்து மாமன்றம் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் ஆதரவுடன் நடத்தும் சுவாமி விவேகானந்தர் யாழ். விஜய நூற்றாண்டு விழா நாளை மறுதினம் கல்லூரி அதிபர் சுந்தரம் தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்: பிரதம விருந்தினராக உடுவில் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் அ: தற்பரானந்தனும், சிறப்பு விருந்தினராக "கலாபூசணம்" பிரம்மஸ்ரீ. நா. வீரமணி ஐயரும் கலந்து கொள்வர். (ஐ-135)

## ஆஸ்பத்திரிக்கு ஜெனரேற்றர்

திருநெல்வேலி, ஜூலை 14

வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு ஜெனரேற்றர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது: இவ் வருட பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து இந்த ஜெனரேற்றர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது: இதே வேளை இவ் வைத்தியசாலைக்கு குளிர் சாதனப் பெட்டியொன்றும் விரைவில் கிடைக்கவிருப்பதாக வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆ: திருநாவுக்கரசு தெரிவித்தார். (ஐ-135)

## இலவச ஆங்கில வகுப்பு

இளைஞர் சேவை பகுதியினால் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்பு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வகுப்பில் 70 இளைஞர் யுவதிகள் பங்கு கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். கிழமை நாள்களில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை இந்தஆங்கிலப் பயிற்சி வகுப்பு தொடர்ந்து ஆறு மாதங்கள் நடத்தப்படும். 90 வீதமான நாள்களில் வகுப்புகளில் பங்கு கொண்ட பயிற்சியாளர்கள் தேசிய மட்டத்திலான பரீட்சை ஒன்றுக்கு தோற்ற முடியும். அதில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-13[illegible])

நிலைமையை அவதானிக்க

# எரிபொருள் நிலையங்களுக்கு அதிகாரிகள் நேரில் விஜயம்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய நிலைய அதிகாரிகள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் சென்று மண்எண்ணெய் மற்றும் எரிபொருள் விநியோகத்தை நேரடியாக அவதானித்து வருகின்றனர்.

வட பிராந்திய முகாமையாளர் தலைமையில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்எண்ணெய் விநியோகம் பற்றி நேரடியாக அவதானித்து சீரான முறையில் மண்ணெண்ணையை பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கான பணிப்புரைகள் வழங்கியுள்ளனர் (ஐ-135)

## முத்திரைகள் வந்தன

நெடுந்தீவு ஜூலை 14

நெடுந்தீவு தபாலகத்திற்கு 100 ரூபா, 50 ரூபா மற்றும் 2 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை வகைகள் வந்து சேர்ந்துள்ளன. (ஐ-111)

# கேரள டாக்டர்கள் புலிகளுக்குச் சிகிச்சை?

## ராணுவ உளவுப பிரிவினர் சந்தேகம்

சண்டையில் காயமடைந்த தமது உறுப்பினர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்து இரு பெண் டாக்டர்களை விடுதலைப் புலிகள் அழைத்து வந்துள்ளதாக இராணுவ உளவறியும் பிரிவினருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

திருமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி கடந்த 23ஆம் திகதி சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் படகுகள் மீது விமானப் படையினரும், கடற்படையினரும் தாக்குதல் நடத்தினர்.

அச்சமயம் கடற்பாறை ஒன்றுடன் மோதிச் சிதறிய படகு ஒன்றில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுடன் இந்த இரு கேரள பெண் டாக்டர்களும் இருந்ததாகவும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எதுவும்தெரியவரவில்லை என்றும் உளவுப் பிரிவினர் தெரிவித்துள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிலைத் தத்திகளை ஒழிக்க இந்தியாவில் இருந்து தெளிகருவிகள்

## இங்கு வந்து சேர்ந்தன

திருநெல்வேலி, ஜூலை 14

மாமரங்களுக்கு பூக்கும் காலத்தில் ஏற்படும் நோய்களுக்கு தரையில் நின்று கொண்டே கிருமி நாசனி தெளிக்கும் பெரிய தெளிகருவிகள் ஐந்து யாழ். கம நல சேவை திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி மூலம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இத் தெளிகருவிகள் நல்லூர், புலோலி, உடுவில், சாவகச்சேரி, வேலணை ஆகிய ஐந்து கம நல சேவை நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன,

மாமரங்களில் ஏற்படும் பூச்சித் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் தங்கள் பிரிவிலுள்ள மேற்படி கம நல சேவை கேந்திர நிலையங்களில் தொடர்பு கொண்டு இத் தெளிகருவியை பயன் படுத்திக் கொள்ள முடியும் என்று யாழ். கம நல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார். (ஐ-135)

## படகுச்சேவை தடைப்பட்டதால்

# அத்தியாவசியப் பொருள்களுக்கு நெடுந்தீவில் தட்டுப்பாடு

நெடுந்தீவு ஜூலை 14

நெடுந்தீவில் மா, மண்ணெண்ணெய், சவர்க்காரம் ஆகிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவு பல நோ. கூ சங்கத்திற்குச் சொந்தமான இரண்டு படகுகளில் 'உதய தாரகை' என்ற படகு பழுதடைந்துள்ளது. 'சமுத்திரதாரகை' என்ற படகு அண்மையில் கடத்திச் செல்லப் பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து நெடுந்தீவு ப. நோ. கூட்டுறவுச் சங்கம் பொருள்களை கடல் மார்க்கமாக அங்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

படகுச் சேவைகள் பாதிப்படைந்ததைத் தொடர்ந்து மேலும் பல அத்தியாவசிய பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. (ஐ - 111)

## ம. எண்ணெய் விநியோகம்

நல்லூர் ஜூலை 14

கல்வியங்காடு பகுதியில் உள்ள தனியாரது எரிபொருள் நிலையத்தில் உலர் உணவு அட்டைக்கு ஐந்து லீற்றர் மண் எண்ணெய் வழங்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் வாங்குவதற்குப் பலர் வரிசையில் நிற்கக் காணப்பட்டனர். சுமார் ஐம்பது பேருக்கு மட்டுமே நாளொன்றிற்கு மண் எண்ணெய் விநியோகிக்கப் படுகிறது. (ஐ-103)

# தங்கத்துரை கொலை: மற்றும் ஒருவர் கைது!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை கொலை தொடர்பாக மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப் பட்டார்.

சிவப்பிரகாசம் அகிலரூபன் என்று அடையாளம் காணப் பட்டுள்ள இந்த நபரை பொலீஸார் திருகோணமலையில் வைத்து கடந்த வெள்ளியன்று கைது செய்தனர்.

அகிலரூபன் பல மாதங்களாக தங்கத்துரையைப் பின் தொடர்ந்து சென்றவர் என்றும்—

அவர் முன்னர் ஒரு தடவை தங்கத்துரையைக் கொலை செய்ய முயற்சித்தபோதிலும் பொலிஸார் அவ்வேளை அந்த இடத்துக்குச் சென்றதால் அந்த முயற்சியைக் கைவிட்டார் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இதுவரை தங்கத்துரை கொலை தொடர்பாக 4 சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். [இ-5]

## ஊழியருக்கு போனஸ்

தென்மராட்சி ஜூலை 14

பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படவுள்ளது.

சங்கத்தின் 1993—94 ஆம் ஆண்டுக்கான இலாபப் பகிர்விலிருந்து போனஸ் வழங்கப் படவுள்ளதாக சங்கச் செயலாளர் ச. யோகராசா தெரிவித்தார். (ஐ-117)

# குடாநாட்டின் கல்விப் பாரம்பரியம் இழக்கப்படாதிருப்பது மகிழ்ச்சியே

## சென். ஜோன்ஸ் பரிசளிப்பில் பேராயர் கென்னத்

நல்லூர், ஜூலை 14

பல இடர்ப்பாடுகள், இன்னல்களின் மத்தியிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்விப் பாரம்பரியம் இழக்கப்படாதிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இப்பகுதியின் கல்விப் பாரம்பரியம் இப்போதும் இலங்கைத் தேசிய மட்டத்தளவில் உயர்ந்து காணப்படுகிறது. அது குறித்து நீங்கள் பெருமை அடையலாம்.

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மாவட்ட பேராயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த மாத இறுதியில் நடைபெற்றது. வண. ஜே. எஸ். சர்வானந்தன் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

பேராயர் கென்னத் பெர்னாண்டோ தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த நிலையிலும் தனது கல்விப் பணி தாழ்வுறாத வகையில் சென். ஜோன்ஸ் கல்லூரி தொடர்ந்தும் தனது சிறப்பான கல்விப் பணியைக் காப்பாற்றி வருகிறது. இடப்பெயர்வின் போது கூட இதனைக் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் தாங்கிக் கொண்டு ஆற்றிய பணிகளே இந்த உயர்வுக்குக் காரணம். இன்று நிலைமைகள் மாறியுள்ளன. இதனைக் காண மகிழ்ச்சியாக உள்ளது.

உலகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. சமுதாய முரண்பாடுகள் காணப்படுவதால் ஆண்களுக்கு மட்டுமன்றி பெண்களும் கற்கக் கூடிய கல்லூரியாக மாற்றப்பட வேண்டும்.

### பாடசாலைகள் யன்னல்கள்

உலகைப் புரிந்து கொள்ளவும் பார்க்கவும் பாடசாலைகளே யன்னல்களாக விளங்குகின்றன. அதனால் கல்வி புகட்டுவதோடு மட்டுமன்றி, இளைஞர்களை வழிப்படுத்தக் கூடியதாகவும் ஆளுமையும் தலைமைத்துவமும் மிக்கவர்களாக அவர்களை ஆக்குவதிலும் கல்லூரிகளின் பணிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறுகிய நோக்கங்களைக் களைந்து உலகின் மேம்பாட்டிற்கும் நல்ல நோக்கங்களுக்காகவும் கல்வியைப் பயன்படுத்த வேண்டும். அரசியல் கலந்துவிடாத நிலையில் சமாதானத்தை உருவாக்கும் கல்லூரியாக சென். ஜோன்ஸ் கல்லூரி உயர வேண்டும்—

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு நான் பல தடவைகள் வருகைதந்துள்ளேன். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமன்றி ஒழுக்கம் மிக்க தலைமுறையை உருவாக்கும் பொறுப்பிலும் அது முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் தமது கல்லூரியின் உயர்வுக்காக பங்களிப்பது மகிழ்ச்சிக்குரியது. படிப்புடன்மட்டுமன்றி கலைகளை வளர்ப்பதிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும்— என்றார்.

கல்லூரி அதிபர் எஸ் தனபாலன் பேசும்போது கூறியதாவது:-

உயர்தர வகுப்பைச் சித்தியெய்திய பின்னர் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குச் செல்வதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாக காத்திருக்க வேண்டியிருப்பதால் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் உலகத்தின் வளர்ச்சியையும் இழந்து போகிறார்கள்.

சிறு பிள்ளைகளைப் பொறுத்தவரை நிறைய புத்தகங்களைச் சுமக்க வேண்டிய நிலைக்குள்ளாவதால் எதிர்காலத்தில் அது அவர்களது முதுகெலும்பைப் பாதிக்கக் கூடியதாகிவிடும். ஜனாதிபதியால் 1987 இல் நியமிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்த ஆணைக்குழுவின் சிந்தனைக்கு இதனைச் சமர்ப்பிக்கிறேன் —என்றார்.

மாணவன் ஆர். ரஜீன் மற்றும் எஸ். பி. ரஜீலன், ஆர். ரகுநாதன், ரி. பாலமுருகன் ஆகியோரும் பேசினார்கள்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான தங்கப்பதக்கங்களையும், பரிசில்களையும், சான்றிதழ்களையும் பேராயரின் துணைவியார் [illegible] னாண்டோ வழங்கினார். (ஐ-103)

# இந்துக் குருமாருக்கு அடையாள அட்டை

## விவரங்கள் செயலகத்தால் சேகரிப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 14

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் இந்துக்குருமார்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபர். நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்துக்குருமார்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான விண்ணப்பங்களையும் புகைப்படங்களையும் கிராம உத்தியோகத்தர்களின் சிபார்சுடன் சேகரித்து யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கைகளும் மாதிரி விண்ணப்பப்படிவங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-12)

## ★ குண்டு வீச்சில் சேதமடைந்த

# நாகர்கோயில் மகாவித்தியாலயம் இன்னும் திருத்தப்படவில்லை

விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த நாகர்கோயில் மகாவித்தியாலயம் இன்னும் திருத்தப்படவில்லை.

சிறிய கட்டடம் ஒன்றில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் மர நிழலிலேயே அங்கு கல்விப் போதனை இடம்பெறுகிறது. கட்டடத்தை திருத்த இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

நாகர்கோயில் மகாவித்தியாலயம் மீது கடந்த காலத்தில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் மாணவர்கள் பலர் பலியானது தெரிந்ததே. (ஐ-36)

# கோட்டங்களுக்கு இடையிலான இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். வலயம்- 1 பாடசாலைகளிடையே 'யுனெஸ்கோ' நிறுவனம் நடத்திய இலக்கியப் போட்டிகளில் கோட்டங்களுக்கு இடையேயான இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன. அந்த இறுதிப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

### நாவன்மைப் போட்டி

**பிரிவு - I**

★ 1 ஆம் இடம் — செல்வி மு. அபிராமி — கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை.

★ 2 ஆம் இடம் — செல்வி த. தர்ஷிகா — இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

★ 3 ஆம் இடம் — செல்வி த. கிளனிஸ்ரா — புனித ஜோண் பொஸ்கோ.

**பிரிவு - II**

★ 1 ஆம் இடம் — சி. சிவாகுலன் — மறுவன்புலவு சகலகலாவல்லி வித்தியாசாலை.

★ 2 ஆம் இடம் — செல்வி எலிசா பிரியதர்சினி பிரான்சிஸ் — வேம்படி மகளிர் கல்லூரி.

★ 3 ஆம் இடம் — செல்வி கி. இளம்பிரியா — எழுதுமட்டுவாள் அ. த. க. பாடசாலை.

**பிரிவு - III**

★ 1 ஆம் இடம் — செல்வி ம. சுஜந்தா நவந்தினி — திருக்குடும்ப கன்னியர்மடம்.

★ 2 ஆம் இடம் — செல்வி யோ. நிர்மதா — சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

★ 3 ஆம் இடம் பொ. வினோதி — அல்லாரை அ. த. க. பாடசாலை.

**பிரிவு - IV**

★ 1 ஆம் இடம் — செல்வி செ. அகலியா — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

★ 2 ஆம் இடம் — செல்வி யோ. காமலின் சுகந்தி — திருக்குடும்ப கன்னியர் மடம்

★ 3 ஆம் இடம் செல்வி சி. சிவதர்சினி — கச்சாய் அ. த. க. பாடசாலை.

**பிரிவு - V**

★ 1 ஆம் இடம் — ம. பி. நிரோஷன்— சென். பற்றிக்ஸ் கல்லூரி.

★ 2 ஆம் இடம் — இ. இராகுலன் — பளை மத்திய கல்லூரி.

★ 3 ஆம் இடம் — செல்வி க. கலைவாணி — வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை.

### ஆங்கில நாவன்மைப் போட்டி

**பிரிவு - V**

★ 1 ஆம் இடம் — செல்வி ச. சுமித்திரை — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

★ 2 ஆம் இடம்— செல்வி க, செந்தில்மதி— சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

★ 3 ஆம் இடம்— அ. யூட் அஞ்சலோ —சென். பற்றிக்ஸ் கல்லூரி.

### நாடகப் போட்டி

★ 1 ஆம் இடம்— கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

★ 2 ஆம் இடம்— ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

★ 3 ஆம் இடம்— சென். பற்றிக்ஸ் கல்லூரி.

### நடனப் போட்டி

★ 1 ஆம் இடம் — பளை மத்தியகல்லூரி.

★ 2 ஆம் இடம்— இந்து ஆரம்ப பாடசாலை.

★ 3 ஆம் இடம் — வேலணை சேர். வைத். துரை. மத்தியமகாவித்தியாம்.

(ஐ)

# பளைப் பகுதிக்கும் விரைவில் மின்சாரம்

பளை ஆஸ்பத்திரிக்கும் பளை நகர்ப் பகுதிக்கும் விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கென180 கே.வி வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்று விரைவில் வந்துசேரவுள்ளது ஜெனரேற்றர் வந்ததும் பளை, பெரியபளை, புலோப்பளை, தம்பகாமம் போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

பளைப்பகுதியில் மின்சார விநியோகத்திற்கான அனைத்து மின் இணைப்புகளும் புதிதாக பொருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. (ஐ - 117)

## பரிசளிப்பு விழா

தேவரையாளி இந்து கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் அதிபர் ம. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் வ. ஆறுமுகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை நேர அட்டவணை (புதியபாடத்திட்டம்)

| திகதி | முற்பகல் | பாடம் | பிற்பகல் | பாடம் |
|---|---|---|---|---|
| 04-08-1997 | 9-00—11-00<br>9-00—12-00<br>9-00—11-00<br><br>11-00—12-00 | விலங்கியல் — I<br>பிரயோக கணிதம் — I<br>வரலாறு — I<br>பகுதி — II<br>வரலாறு — I<br>பகுதி — I | 1-00—4-00 | மனைப் பொருளியல் — I |
| 05-08-1997 | 9-00—12-00<br>9-00—12-00 | பிரயோக கணிதம் — II<br>விலங்கியல் — II | 1-00—3-00<br>3-00—4-00 | வரலாறு — II பகுதி — II<br>வரலாறு — II பகுதி — I |
| 06-08-1997 | 9-00—12-00 | தூயகணிதம் — I | 1-00—4-00 | மனைப்பொருளியல் — II |
| 07-08-1997 | 9-00—11-00<br>9-00—12-00 | தாவரவியல் — I<br>தமிழ் — I | 1-00—4-00 | தூயகணிதம் — II |
| 08-08-1997 | 9-00—12-00<br>9 00—12-00 | தாவரவியல் — II<br>தமிழ் — II | 2-00 5-00 | சங்கீதம் — கர்நாடகம் — I |
| 09-08-1997 | 9-00—11-00<br>9-00—12-00<br><br>11-00—12-00 | இரசாயனவியல் — I<br>பொருளியல் — I<br>பகுதி — II<br>பொருளியல் — I<br>பகுதி — I | 1-00—4-00 | சங்கீதம் — கர்நாடகம் — II |
| 11-08-1997 | 9-00 - 12-00<br>9-00—11-00<br><br>11-00—12-00 | இரசாயனவியல் — II<br>பொருளியல் — II<br>பகுதி — II<br>பொருளியல் — I<br>பகுதி — I | 1-00—4-00 | நாட்டியம் பரதம் — I |
| 12-08-1997 | 9-00—11-00<br>9-00—12-00 | பௌதிகவியல் — I<br>கணக்கியல் — I | 1-00—4-00 | நாட்டியம் — பரதம் — II |
| 13-08-1997 | 9-00—12-00 | பௌதிகவியல் — II<br>கணக்கியல் — II<br>சித்திரம் — I | 1-00—3-00 | விவசாய விஞ்ஞானம் — I |
| 14-08-1997 | 9-00—12·00 | சிங்களம் — I | 1-00—4-00 | விவசாய விஞ்ஞானம் — II |
| 15-08-1997 | 9-00—12-00 | சித்திரம் — II<br>ஆங்கிலம் — I<br>கணிதம் — I | 2-00—5-00 | இந்து நாகரிகம் — I |
| 16-08-1997 | 9-00—12-00 | சிங்களம் — II | 1-00—3-00<br>3-00—4-00 | வர்த்தகம் — I பகுதி — II<br>வர்த்தகம் — I பகுதி — I |
| 19-08-1997 | 9-00—12·00 | சித்திரம் — III<br>ஆங்கிலம் — II<br>கணிதம் — II | 1-00—3-00<br>3-00—4-00 | வர்த்தகம் — II பகுதி — II<br>வர்த்தகம் — II பகுதி — I |
| 20-08-1997 | 9-00—12-00 | புவியியல் — I | 1-00—4-00 | இந்து நாகரிகம் — II |
| 21-08-1997 | 9-00—11-00<br>11-00—12-00 | புவியியல் — II<br>பகுதி — II<br>புவியியல் — I<br>பகுதி — I | 1-00—4-00 | அளவையியலும் விஞ்ஞானமுறையும் — I |
| 22-08-1997 | 9-00—11-00<br>11-00—12-00 | புவியியல் — III<br>பகுதி — II<br>புவியியல் — III<br>பகுதி — I | 2-00—5-00 | அளவையியலும் விஞ்ஞானமுறையும் — II |
| 23-08-1997 | 9-00—11-00<br><br><br>11-00—12-00 | அரசியல்<br>மூலதத்துவங்கள் — I<br>பகுதி — II<br>அரசியல்<br>மூலதத்துவங்கள் — I<br>பகுதி — I | 1-00—4-00 | நாடகமும் அரங்கியலும் — I |
| 25-08-1997 | 9-00—11·00<br><br><br>11-00—12-00 | அரசியல்<br>மூலதத்துவங்கள் — II<br>பகுதி — II<br>அரசியல்<br>மூலதத்துவங்கள் — II<br>பகுதி — I | 1-00—4-00<br>1-00—4-00 | இந்துசமயம் — I<br>கிறிஸ்தவம் — I |
| 26-08-1997 | 9-00—12-00 | வர்த்தகமும் புள்ளி<br>விவரவியலும் — I<br>நாடகமும்<br>அரங்கியலும் — II | 1-00—4-00 | இந்துசமயம் — II<br>கிறிஸ்தவம் — II |
| 27-08-1997 | 9-00—12-00<br>9-00—12-00 | வர்த்தகமும் புள்ளி<br>விவரவியலும் — II<br>நாடகமும்<br>அரங்கியலும் III | | |

## பளையில் கோழிக் குஞ்சு விநியோகம்

தென்மராட்சி. ஜூலை 14

பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாசார், முகாவில், சோரன்பற்று ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பதினொரு குடும்பங்களுக்கு ஒரு மாதக் கோழிக் குஞ்சுகள் அண்மையில் பளை கால்நடை வளர்ப்போர் சங்கத்தினால் வழங்கப்பட்டன.

பளைப் பிரதேச செயலகத்தினால் இவ்வருட பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலிருந்து கோழிக்குஞ்சுகள் வாங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## நவாலியில் இளைஞர் கழகம்

நவாலி, ஜூலை 14

நவாலியில் இளைஞர் கழகம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள 3 கிராம சேவையாளர் பிரிவிலும் தலா ஏழு இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு இக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கழகங்கள் மூலம் இங்கு வேலையற்றிருப்பவர்களுக்கு சுய தொழில் வாய்ப்பளிப்பதற்கான மூலப் பொருள்கள் வழங்குதல், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், சிரமதானங்கள் செய்தல் என்பன மேற்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-100)

## தபாலகம் திறப்பு

திருநெல்வேலி ஜூலை 14

கடந்த கால அனர்த்தங்கள் காரணமாக கடந்த எட்டு வருட காலமாக இயங்காதிருந்த புன்னாலைக் கட்டுவன்வடக்கு உபதபால் அலுவலகம் அண்மையில் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதே வேளை செயற்படாதிருக்கும் கரம்பொன்தெற்கு, நாரந்தனை தெற்கு, மாரீசன் கூடல் ஆகிய உபதபால் அலுவலகங்களையும் மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தபால் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-135)

## ஆலோசனை நிலையம்

திருநெல்வேலி, ஜூலை 14

நல்லூர் லயன்ஸ் கழகம் கழக எல்லைக்குள் வசிக்கும் பொது மக்களுக்கு அவர்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும், உதவி புரிவதற்காகவும் அலுவலகம் ஒன்றை விரைவில் திறக்கவுள்ளது.

நல்லூர் ஜமுனா வீதியில் இந்த அலுவலகம் இயங்கவிருப்பதாகவும், லயன்ஸ் கழகங்களின் தலைமைப் பீடத்தின் செயல் திட்டங்களில் ஒன்றான இச் சேவையை இப் பகுதியிலுள்ள வறிய மக்களுக்கு வழங்கவிருப்பதாக நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார். (ஐ-135)

## மின் விநியோக நேரம் மாற்றம்

தென்மராட்சி, ஜூலை 14

சாவகச்சேரி நகரப் பகுதிக்கான மின் விநியோக நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி தினமும் இரவு 7 மணிமுதல் 11 மணி வரையும், பின்னர் காலை 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

முன்பு நகரப் பகுதியில் மாலை 6.30 மணிமுதல் இரவு 11 மணி வரையும் காலை 4.30 மணி முதல் 6 மணிவரையும் மின் வழங்கப்பட்டு வந்தது. (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

புதிய பழைய பாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள் .றோணியோ இயந்திரங்கள். தேவை. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம் .[48264]

### பௌதிகவியல்

சிறுகுழுவாகவோ அல்லது தனியாகவோ பௌதிகவியல் வகுப்புகளுக்கும், நடைபெறவிருக்கும் இறுதிப் பரீட்சைக்கான கடந்த கால வினாக்கள் மீட்டல் செய்யவும் தொடர்பு:- 122, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். [48371]

### சமாதானம் வேண்டி

வெள்ளிக்கிழமை தோறும் பிரார்த்தனைகளை கோயில்களில்களில் மேற்கொள்க. இந்து இளைஞர் பேரவை யாழ்ப்பாண மாவட்டம் நல்லூர். [48376]

### சோதிடம்

வாங்கி விட்டீர்களா? 'என் சோதிடம் உங்களை அதிர்ஷ்டசாலியாக்கும் வெற்றிக்கனி, ''ஆளை அறிய கைகளை வைத்திருக்கும் முறையைக் கவனியுங்கள்'' சோதிடர் V.A. சிவராஜா, (வேலணை) 152 B, அரசடிறோட், கந்தர்மடம். [48365]

### புலமைப்பரிசில் '97

ஆண்டு 5-க்குரிய புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாக்கள் விடைகளுடன் 'Bright Scholar' விற்பனையாகிறது. எமது மாணவர்களுக்கு வினாத்தாள்கள் யாவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. தொடர்பு:- ஆசிரியர் ஆனந்த சபேசன், Shamrock Academy, யா/ ஈச்சமோட்டை வீதி [48377]

# கிளாலிக்கரையில் நீண்ட காலமாக பராமரிப்பின்றி உள்ள ஆலயங்கள்

தென்மராட்சி, ஜூலை 14

கிளாலி கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள மூன்று தேவாலயங்களும் ஓர் இந்து ஆலயமும் கடந்த ஒன்றரை வருடமாக கவனிப் பாரற்ற நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி புனித யாகப்பர் தேவாலயம், புனித மிக்கேல் தேவாலயம், புனித தோமையார் தேவாலயம், கிளாலி முருகன் கோயில் ஆகியவையே கவனிப்பாரற்று காணப்படும் ஆலயங்களாகும்.

புனித தோமையார் தேவாலயத்தின் கூரைப்பகுதி அகற்றப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளாலி—பளை வீதியின் கடற்கரையை அண்டிய பகுதி முட்கம்பி வேலியிடப்பட்டும். இப்பகுதிக்குள் மக்கள் செல்ல அனுமதிக்கப்படாததால் இவ் ஆலயங்கள் கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-117)

## போக்குவரத்து வசதி இன்றி வடமராட்சி கிழக்கில் பாதிப்பு

செம்பியன்பற்று, ஜூலை 14

வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களுக்கான நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

வல்லிபுரக் கோயில் கூட்டுறவுச் சங்கக் கிளையில் மட்டும் இந் நிவாரணத்துக்கான பொருள்கள் வழங்கப்படுகின்றன.

வடமராட்சி கிழக்கில் போக்குவரத்து சேவைகள் முற்றாகச் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் மீனவர்கள் தூர இடங்களில் இருந்து கால் நடையாகவும், சைக்கிளிலும் வந்து உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுச் செல்வதைக் காணமுடிகிறது.

செம்பியன்பற்றில் இருந்து சாவகச்சேரி வரை இடம் பெற்று வந்த ஒரேயொரு தனியார் வாகன சேவையும் தடைப்பட்டுள்ளது. (ஐ-36)

## போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

நவாலி, ஜூலை 14

அரசாங்க சேவையிலுள்ள சிற்றூழியர்களை பொது எழுதுநர் சேவை II ஆம் பிரிவுக்கும் தட்டெழுத்தாளர் சேவை II 'ஆம்' பிரிவுக்கும் நியாமிப்பதற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத்திகதி 08-08-97 ஆகும்.

இது சம்பந்தமான முழு விவரங்களும் 19-06-97 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (ஐ-10)

## அரசியல் பழிவாங்கல்:

# 50 ஆயிரம் பேருக்கு நஷ்டஈடு இல்லை

அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட சுமார் 50 ஆயிரம் பேருக்கு அரசு இன்னும் நஷ்ட ஈடு வழங்கவில்லை என அரச தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்கள் குறித்து ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்ட போதிலும் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் சிலருக்கு மட்டுமே நஷ்ட ஈடு வழங்கப்பட்டதாக தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவுக்கு 69 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்தன எனவும் —

இவற்றில் 18 ஆயிரத்து 100 முறைப்பாடுகள் கல்வி அமைச்சு தொடர்பாகவும் 13 ஆயிரத்து 421 முறைப்பாடுகள் போக்குவரத்து அமைச்சு தொடர்பாகவும் 12 ஆயிரத்து 193 முறைப்பாடுகள் பொது நிர்வாக அமைச்சு தொடர்பாகவும் கிடைத்துள்ளன எனவும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

1977- க்குப் பின்னர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டோரில் அதிகமானோர் 1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் ஆவர்.


யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

## பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(தற்காலிகம்)

எமது சமாசத்தில் பின்வரும் தற்காலிக பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சமாசத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரங்களில் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும். வயது 18 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டவர்களாகவும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் அவ்வப் பதவிக்கான கல்வித் தகைமைகள் இருத்தல் வேண்டும். மேலதிக விவரங்களை சமாசத் தலைமைக் காரியாலயத்திலும். அங்கத்துவ ப. நோ. கூ. சங்கங்களிலும் பார்வையிடமுடியும். சமாசத்தின் 3 மைல் சுற்றாடலுக்குள் வசிப்பவர்களுக்கு தொழில் நன்மை கருதி முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கும் முடிவுத் திகதி 28 - 07 - 97

| பதவியின் பெயர் | பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் |
|---|---|
| (1) இளை முகாமையாளர் | 208/14 |
| (2) வாகனச் சாரதி | 312/11 |
| (3) வாகன சுத்திகரிப்பாளர் | 314/14 |

பொது முகாமையாளர்.

இல: 111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
97 - 07 - 10 (சி-1109)


## கண்ணீர் அஞ்சலி

திரு. நல்லதம்பி குலசிங்கம்
(பதவி நிலை உதவியாளர், பிரதேச செயலகம் வலிகாமம் வடக்கு)

சிகிச்சையின் பொருட்டு கொழும்பு சென்ற

திரு. நல்லதம்பி குலசிங்கம்,

1997 - 07 - 11 இல் கொழும்பில் சிவபதமடைந்தார். அவரது இழப்பினால் ஆறாத்துயரில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் வடக்கு
(48382) பிரதேச செயலக, நலன் புரிச்சங்கம்.

## கவிஞர் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் கவிஞர் விழா அதிபர் ஆ. இராஜகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இவ் விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகளும் கவியரங்கமும் இடம் பெறவுள்ளன. (ஐ-135)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 34 வயதுடைய அழகும் நற்குணமும் பொருந்திய B.S.M.S. பட்டதாரியும் தற்பொழுது அரச வைத்தியசாலையில் பணிபுரியும் மகளுக்குப் பெற்றோர் அரச அல்லது தனியார் துறையில் தொழில்புரியும் மணமகனை எதிர்பார்க்கின்றனர். வைத்தியத் தொழிலை மேற்கொள்வோர் விரும்பத்தக்கது. சாதகக்குறிப்பு, குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சீதன விவரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திரு. சி. இராசையா
தேனாவளவு,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(48356)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 07 — 01 — 1959



மறைவு: 14 — 06 — 1997

### திருமதி யோகலட்சுமி சதானந்தன்
(இலங்கைவங்கி- சுன்னாகம்)

அன்பின் திருவுருவாய், அமைதியின் உறைவிடமாய்,
பண்பின் சிகரமாய், ஊர்புகழும் உத்தமியாய்,
மாண்புடன் வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஒரு திங்கள் ஆனது.

14- 07- 1997 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டியிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன் ச. சதானந்தன்
சகோதரன் க. விஸ்வநாதன்

''கைலாயா வாசா''
முத்துக்கிருஷ்ணா வீதி, சுன்னாகம். (47321)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 10 — 1957



மறைவு: 14 — 07 — 1995

### அமரர் ச. வசந்தகுமார் (காந்தி)

அன்பாகவும் பாசமாகவும் மனதில்
கனிவுறு சொல்லினாலும் சிரித்த
முகத்துடனும் எம்மை எல்லாம் வழி
நடத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஈராண்டு மறைந்ததே!
ஆறுதல் சொல்ல யாருமில்லை
பதறுகின்றோம் மனைவி, மக்கள்.
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
என்றுமே அகலாது ஏங்குகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி,
மக்கள்: நிஷாந், நிக்சன்,
நிலோஜினி, நிறோஜன்,

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (48314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நீக்கமும் நீடிப்பும்

அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்து வாக்களித்தது. எனினும் நாற்பது மேலதிக வாக்குகளால் அப்பிரேரணை கடந்த பத்தாம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்னரைப் போல வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுவு நிலைமை வகிப்பதற்குப் பதிலாக, எதிர்த்து வாக்களித்தமையை, போருக்கு எதிரான அடையாள ஆட்சேபமாகக் கொள்ளலாம்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மற்றும் இரண்டு தமிழ்க்கட்சிகளும், கூட்டணியைப் போன்றே போருக்கு எதிராகத் துணிச்சலுடன் செயல் மூலம் ஆட்சேபம் தெரிவித்திருப்பின் தமிழர்களின் ஒற்றுமையைப் பிரதிபலித்திருக்கலாம். காரணங்கள் எவையாக இருப்பினும், தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப் பட மாட்டார்கள் என்பது மீண்டும் மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கப் பட்டிருக்கிறது!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கங்கள் காலம் கடத்தி வருவதற்கு இந்தப் பலவீனமே பிரதான காரணம் என்பதனை எழுதிக் காட்ட வேண்டியதில்லை. தமிழர்களின் சமீப கால அரசியல் வரலாறு அதனை நடைமுறையில் புகட்டியுள்ளது.

அவசரகாலச் சட்டம் இம்முறை நாடு முழுவதிற்கும் பிரகடனப் படுத்தப்படவில்லை. நாட்டின் பல பகுதிகளில் அது நீக்கப் பட்டிருக்கிறது.

நாட்டின் பல பிரதேசங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருப்பதனை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் பெருமையுடன் அறிவித்தார். கடந்த ஒரு வருட காலத்தின் பின்னர் பல பகுதிகளில் அவசர காலச் சட்டத்தை நீக்க முடிந்தமை குறிப்பிடக் கூடியது என்று பிரஸ்தாபித்தார்.

ஆயினும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் அவசரகாலச்சட்ட அமுல் குறித்து நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்கள் பதிவுக்குரியவை.

சுதந்திரம் கிடைத்த 18,106 நாள்களில் 8,760 நாள்கள் வடக்கு - கிழக்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆளப்பட்டிருக்கிறது — என்ற புள்ளிவிவரம் அரசுகளின் தமிழருக்கு எதிரான அடக்கு முறையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது

வடக்கு — கிழக்கில், தமிழர் பிரதேசத்தில் சுமார் 25 வருடங்களாக இயல்பு நிலையும், சுதந்திரமான வாழ்க்கையும் மக்களுக்கு இருக்கவில்லை. அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதமும் இருக்கவில்லை. தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை அவசர காலச் சட்ட விதிகள் என்ற கூரிய, கொடிய பற்களால் அரசுகள் கடித்துக் குதறி வருகின்றன என்பதாகும்.

புதிய அரசு பதவி ஏற்று மூன்று வருடங்களாகின்றன. எனினும் வடக்கு— கிழக்கு மக்களின் நிலைமை மாறவில்லை. அது மாறினால் மட்டுமே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உண்மையாகப் பெருமைப்பட முடியும்.

# தப்பி ஓடிய படையினராலேயே இராணுவ நடவடிக்கை தாமதம்

## புதிதாக ஆள் திரட்டும் முயற்சியிலும் பலன் இல்லை

கொழும்பு, ஜூலை 14

இராணுவத்தை விட்டு ஓடியோர் எண்ணிக்கை 20 ஆயிரம் பேர் என்றும்—

இது 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை தொடர தடையாக உள்ளது என்றும் — பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் தப்பி ஓடிய படையினரில் 13 ஆயிரம் பேர் திரும்பி வந்து சேவையில் இணைந்து கொண்டனர் என்று அரசாங்கம் அறிவித்தது.

ஆனால் மீண்டும் அதேயளவு எண்ணிக்கையினர் தப்பி ஓடியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது — என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது

32 ஆயிரம் படையினர் தப்பி ஓடினர் என்றும் —

அதில் 10 ஆயிரம் படையினர் திரும்பி வந்து படையில் இணைந்தனர் என்றும்— மற்றொரு செய்தி தெரிவித்தது.

கடந்த 2 மாதங்களாக இராணுவ முகாம்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் —

இளைஞர்கள் கூடியளவு அக்கறை காட்டாத காரணத்தால் அந்த முயற்சி பயனளிக்காது போனதாகவும்—

அதன் பின்பே இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை மீளச்சேர்க்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் — அச்செய்தி மேலும் தகவல் வெளியிட்டது.

(இ-3-150)

# கடலில் குளிக்கச்சென்ற 3 மாணவர் பலி!

மட்டக்களப்பு கல்லடிக் கடலில் குளிக்கச்சென்ற மாணவர்களில் மூவர் உயிரிழந்தனர்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரி மாணவர்களான ரி. சந்திரமோகன் (16 வயது), அவரது சகோதரரான ஜெகன் (15 வயது), சாள்ஸ் பிரதீபன் (15 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்த மாணவர்களின் சடலங்களைக் கடலில் தேடும் பணி நேற்றிரவு வரை நீடித்தது. (இ-3-21)

# மெய்வன்மைச் சங்கம் நடத்தும் பரீட்சைகள் செப்டெம்பர் 15 இல்

## யாழ். உட்பட மூன்று இடங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்தும் பரீட்சைகள் எதிர்வரும் செப்டெம்பர்மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம், கொழும்பு, அநுராதபுரம் ஆகிய இடங்களில் நடைபெற இருப்பதாக நேற்று ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் சார்பில் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. டபிள்யூ விமலராஜன் இது தொடர்பாக ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்துடன் பேச்சு நடத்தினார்.

யாழ்ப்பாணத்திற்கான பரீட்சை மண்டபம் யாழ். இந்துக் கல்லூரியில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மெய்வன்மைச் சட்ட விதிகள் அடங்கிய புத்தகக் குறிப்பை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்க உபதலைவர் கப்டன் என். சோமசுந்தரத்திடம் அறுபது ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் விரைவில் நடைபெறும் என்றும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

# 4 நாடுகள் கலந்து கொள்ளும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## இன்று கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 14

நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் ஆசிய வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது.

இந்த சுற்றுப் போட்டியையொட்டி கொழும்பு நகரில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

இன்றைய போட்டியில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதும். (இ-3)

# தங்கத்துரை கொலை விசாரணை கிராம சேவையாளர் கைது!

திருகோணமலை, ஜூலை 14

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை படுகொலை தொடர்பாக கிராம சேவையாளர் ஒருவரும் மற்றும் ஒரு இளைஞரும் பொலீஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கொலையின் முக்கிய சூத்திரதாரியான நபருக்கு இருப்பிடம் வழங்கினார் என்ற குற்றச் சாட்டிலேயே அந்தக் கிராம சேவையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முக்கிய சூத்திரதாரியைக் கைது செய்ய பொலீஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (இ-3-150)

# இடம்பெயர்ந்த 64 ஆயிரம் மக்கள் போதிய உணவு வசதிஇன்றி சிரமம்

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த 64 ஆயிரம் மக்கள் மடு, மாந்தைப் பகுதிகளில் உணவு வசதியின்றிக் கஷ்டப்படுகின்றனர்.

ஐ. தே. க. தேசிய பட்டியல் எம். பியான ஜயலத் ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அல்லற்படும் அந்த மக்களுக்கு உதவ சகலரும் முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

உணவு, இருப்பிட வசதிகள் இன்றி இவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## சிறிமானி பங்கு பற்றமாட்டார்

கொழும்பு, ஜூலை 14

அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கும் வகையில் இன்றும், நாளையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பங்குபற்ற மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முன்னணியின் தலைவர் சிறிமானி அத்துலத்முதலி மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளார்.

அதே சமயம் — பிரதி அமைச்சர்களான மொண்டி கோபல்லவ, பி. ஜி. கலுகல்ல ஆகியோர் தமது முன்னணியின் கொள்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாகவும்—

அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் — சிறிமானி மேலும் தெரிவித்தார். (இ-3-150)

## வேலணையில் அ. அட்டை விநியோகம்

நெடுந்தீவு, ஜூலை 14

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜே-10, ஜே-11, ஜே-13 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று திங்கட்கிழமை முதல் மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இதே வேளை ஜே-12, ஜே-14, ஜே-21 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று முதல் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வன்னியில் இருந்து அண்மையில் படகு மூலம் வந்து சேர்ந்த குடும்பங்களுக்கு இலவச உடுபுடைவைகளும் வழங்கப்படவுள்ளன.

(ஐ-111)

# சிப்பாய்கள் துப்பாக்கிச் சூட்டில் கடற்படையினர் இருவர் பலி!

## அடையாளம் தெரியாது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 14

'' வெற்றி உறுதி '' இராணுவ நடவடிக்கைத் துருப்புக்களுக்கிடையில் தற்செயலாக இடம்பெற்ற மோதல் ஒன்றில் கடற்படைச் சிப்பாய்கள் இருவர் உயிரிழந்ததாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

'' வெற்றி உறுதி '' நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைப் பாதுகாக்க விமானப்படை, கடற்படை, பொலீஸார் ஆகியோரிடம் தனித்தனியாகப் பகுதிகள் பிரித்து ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அந்த அந்தப் பிரிவை அவ்வப் பிரிவினர் பாதுகாத்து வருகின்றனர்.

அண்மையில் ஒரு நாள் இரவு ரோந்து வந்த இராணுவ அணியினர் வேறு ஆள்கள் தமது அரணுக்குள் ஊடுருவியுள்ளதாகக் கருதி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் இரு கடற்படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டமை பின்னர் தெரிய வந்தது என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

## இராணுவ செயலாளர்

கொழும்பு, ஜூலை 14

இராணுவச் செயலாளராக பிரிகேடியர் எச். ஜி. என். பத்மசிறி நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3-150)

## தன்னினச் சேர்க்கைக்கு அனுமதி

சன்மரீனோ, ஜூலை 14

உலகில் மிகப் பழைமை வாய்ந்ததும், சிறியதுமான சன்மரீனோ குடியரசில் தன்னினச் சேர்க்கை சட்ட பூர்வமானதாக்கப்பட்டிருக்கிறது.

இத்தாலியின் வடபகுதியில் அட்றியாட்டிக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள இச்சிறிய நாட்டின் நாடாளுமன்றத்தில் தன்னினச் சேர்க்கைக்கு அனுமதி அளிக்கும் சட்ட மூலத்துக்கு ஆதரவாக 28 பேரும் எதிராக 21 பேரும் வாக்களித்தனர்.

இதுவரை தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவது சன்மரீனோவில் தண்டனைக்குரிய குற்றமாக இருந்தது. (ஐ)

# அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆளும் கட்சி எம். பி. எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 14

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயசேன ராஜகருண எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவர் சிங்கள ஆணைக்குழு முன்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தபால், தொலைத்தொடர்பு, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ-3-150)

## நாளை

ஆனி 31

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி

பிற்பகல் 2.42 வரை.

நட்சத்திரம்: விசாகம்

முன்இரவு 11.00 வரை.

சுபநேரம்: 10 30-12 00

ராகுகாலம்: 3.00-4 30

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மை..

(முதலாம் பக்கத் தொடர்)

பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும்—

இப்போது இடம் மாற்றப்பட்டு இப்போட்டிகள் வவுனியாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகள் மூன்றாவது தடவையாக இப்போது ஒத்தி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

இப் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் யாழ். மாவட்ட மாணவர்கள் பங்குபற்ற வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3-150)

## வீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பந்தப்பட்ட மாணவி அன்று காலை வழமைபோல ''ரியூட்டரிக்கு'' வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார். சுற்றிவளைப்புக் காரணமாக ''ரியூட்டரி'' அன்று நடைபெறவில்லை என்பதனை இநேகிதிகள் மூலம் இடைவழியில் அறிந்து கொண்டு வீடு திரும்பினார்.

மாணவி வீடு திரும்பிய வேளை, பெற்றோர் ஊரில் உள்ள ஆலய உற்சவத்துக்கெனச் சென்றுவிட்டனர். தானும் கோயிலுக்குப் போவதற்கென மாணவி தனது வீட்டுக் கிணற்றில் குளிப்பதற்கு ஆயத்தம் செய்தார். அப்போது நேரம் முற்பகல் ஒன்பது மணியிருக்கும்.

அவ்வேளை வீட்டிற்குள் திடீரென நுழைந்த சிப்பாய், மாணவியை இழுத்து அவரது வாய்க்குள் துணியைத் திணித்து பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கினார். மற்றும் ஒரு சிப்பாய் அப்பொழுது அவருக்கு உதவியாக வெளியில் காவலுக்கு இருந்தார்.

இச்சம்பவம் குறித்துக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அராலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் அபயசேகரா விசாரணை மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட மாணவியை இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று சிப்பாய்களின் அடையாள அணிவகுப்பை நடத்துவித்தார்.

சம்பந்தப்பட்ட மாணவி தம்மை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிய சிப்பாயை அடையாளம் காட்டினார். இதனைத் தொடர்ந்து அந்தச்சிப்பாய் அங்குவைத்து ஏனைய படையினரால் தாக்கப்பட்டார்.

இது குறித்து மேற்கொண்டு விசாரணை நடத்தி, சிப்பாய் சட்ட ரீதியாகத் தண்டனை பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மாணவியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் உறுதி அளித்தார்.

இதேவேளை—

பாதிக்கப்பட்ட மாணவி நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

மாணவி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டது வைத்திய பரிசோதனையின் போது ஊர்ஜிதமாகியுள்ளதாக சட்ட வைத்திய வட்டாரங்களில்—இருந்து தெரிய வந்தது.

அதேசமயம்—

மாணவியைக் கெடுத்தவர் எனச் சந்தேகிக்கப்படும் சிப்பாயும், அவருக்கு உதவியாக இருந்தார் எனக் கருதப்படும் சிப்பாய் ஒருவரும்—

யாழ். ஆஸ்பத்திரிக்கு கைவிலங்கிட்டவாறு சுன்னாகம் பொலீஸாரால் கூட்டி வரப்பட்டனர். இவர்கள் இருவரையும் சட்ட வைத்திய அதிகாரி விசாரணை செய்தார்.

(அ-15)

## ரோந்து சென்ற பொலீஸார் மீது தாக்குதல்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் வீதி ரோந்தில் ஈடுபட்ட பொலீஸார் மீது நேற்றுக் காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஒரு பொலீஸாரும், ஓர் ஊர்காவலரும் காயம் அடைந்தனர்.

(இ-3-21)

## படையினர் ஷெல் வீச்சு

நெடுங்கேணி, பன்றிக்கெய்த குளம் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

நண்பகல் அளவில் கிபிர் விமானத் தாக்குதலும் இடம்பெற்றது. (இ-3-164)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொள்ளப்பட்டது.

ஒரு மாலுமி மீது வேட்டு ஒன்றுபட்டது. அவர் இறந்துவிட்டார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபின் சில படகுகள் கப்பலைச் சுற்றி நிற்பதைக் கண்டேன்.

பின்னர் அவர்கள் எம்மைக் கைது செய்து கூட்டிச் சென்றனர்.

இலங்கை ஒரு தீவு. இங்கு பிரச்சினை ஒன்றும் இல்லை என நாம் கருதினோம். மல்லாவியில் மக்கள் உணவு, இருப்பிட வசதிகள் இன்றி கஷ்டப்படுவதைக் கண்டோம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-164)

## அராலிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணின் பெற்றோர்கள் சம்பவதினம் குறிப்பிட்ட இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியிடம் இது குறித்து முறைப்பாடு செய்தனர்.

பொறுப்பதிகாரி குறிப்பிட்ட இளம் பெண்ணின் வீட்டுக்கு சிப்பாய்களுடன் சென்று ஆரம்ப விசாரணைகளை நடத்தினார். குற்றமிழைத்தவர் அடையாளம் காணப்பட்டார். அதைத் தொடர்ந்து, அந்தச் சிப்பாயின் சகாக்கள் அவரை பொது மக்கள் முன்னால் வைத்து இரக்கம் எதுவும் காட்டாமல் தாக்கினார்கள்.

தாக்குதலால் காயமடைந்த சிப்பாய், மேல் விசாரணைக்காக, இம்மாதம் 12 ஆம் திகதி சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

அவருக்கு எதிரான நீதிமன்ற வழக்கின்போது, இராணுவத்தினர் அந்தச் சிப்பாய்க்கு எந்த வகையிலும் உதவி செய்யமாட்டார்கள்.

இந்தச் செயலுக்கு இராணுவம் கண்டனம் தெரிவிப்பதுடன், சம்பந்தப்பட்ட சிப்பாய் மீது விரைவில் வழக்குத் தொடருவதற்கான சகல உதவிகளையும் பொலீஸாருக்கு வழங்கும்.

இதேவேளை, இச் செயலினால் அதிர்ச்சியும், கவலையும், வெட்கமும் அடைந்த முகாம் பொறுப்பதிகாரியும், குற்றமிழைத்த சிப்பாயின் பிரிவைச் சேர்ந்த சகல உறுப்பினர்களும், அப்பாவியான பாதிக்கப்பட்ட இளம் பெண்ணுக்கும் அவரது குடும்பத்துக்கும் பணம் மற்றும் பொருள் உதவிகளைச் செய்வதற்குத் தாமாகவே முன்வந்துள்ளனர்.

குற்றமிழைத்த சிப்பாய்க்கு எதிரான சட்ட நடவடிக்கைக்கும் மேற்படி உதவிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை — என்றுள்ளது.

(அ)

# தீர்வு யோசனை நவம்பரில் வராவிடில் திடீர் தேர்தல்?

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டால் அரசு திடீர் தேர்தல் ஒன்றை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு ஐ. தே. க.வின் ஆதரவைப் பெற அரசு பல முனைகளால் முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

அம் முயற்சிகள் பலன் அளிக்கும் பட்சத்தில் நவம்பரில் அந்த யோசனைகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

அவ்வாறு செய்ய முடியாது போனால் திடீர் தேர்தல் ஒன்றை நவம்பரில் அரசு நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரம் — தேர்தல் நடத்தக் கூடிய நல்ல நாள் டிசம்பர் 29 ஆம் திகதி என்று ஜோதிடர்கள் கணிப்பிட்டு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது. (இ-3-150)

# வாவிக்கு அப்பால் இருந்து புலிகள் மோட்டார் தாக்கு

மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு நகரிலுள்ள 3 ஆவது படைப்பிரிவு அலுவலகம் மீது நேற்று மாலை 5-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் வாவிக்கு அப்பால் உள்ள தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவமும், விமானப் படையும் இணைந்து பதில் தாக்குதலை மேற்கொண்டன.

இத் தாக்குதலின் போது ''டெனிஸ் கோட்'' ஒன்றில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஆர். சிரேஷ் (17 வயது), எஸ். சிரோஷன் (13 வயது) ஆகியோர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ-3-21)

## வடபகுதி பயணிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 14

வடக்கே செல்வதற்காகத் திருகோணமலையில் தவம் கிடக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலைப் பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இவர்கள், தம்மைக் கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கோரினார்கள்.

நேற்று ஞாயிறு விடுமுறை தினமாகையால் அரச உயர் அதிகாரிகள் அங்கு இருக்கவில்லை. (இ-3-164)

## 7 முஸ்லிம்கள் இன்று விடுதலை

கொழும்பு, ஜூலை 14

திருகோணமலை மாவட்டம் இறக்கக்கண்டியில் காணாமற் போயுள்ள முஸ்லிம்களில் 7 பேர் இன்று விடுதலை செய்யப்பட இருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு திருகோணமலை அதிகாரி ஜீன் லுக் ஜூலியட் தெரிவித்தார்.

திருகோணமலையில் வெளிநாட்டு அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களின் கூட்டத்திலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

(இ-3-150)

## வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்)

டிக்கை மீளாய்வு செய்யப்படும் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுவதாகவும் —

அவை பூர்த்தியாகி ஆயுதங்களும் வந்துசேர்ந்ததும் இராணுவ நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படும் என்றும் — ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு ஊடறுத்துத் தாக்குதல்களால் ஸ்தம்பித்து போயுள்ள இந்த நடவடிக்கையைத் தொடர்வது தொடர்பாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும், உயர் மட்ட இராணுவத் தளபதிகளும் ஆராய்ந்து மீளாய்வுத் திட்டமொன்றை வகுத்துள்ளனர்.

இத்திட்டப்படி படைகள் எந்த எந்த இடங்களில் நிறுத்தப்படவேண்டுமோ அந்த அந்த இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் நடவடிக்கை ஆரம்பிக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## கப்பல் சேவை குறித்து இன்று ஏதாவது முடிவு வெளிவரலாம்

திருகோணமலை, ஜூலை 14

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான தீர்க்கமான முடிவு இன்று நண்பகல் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடமாகாண மீள் குடியமர்வு, புனவாழ்வு அதிகார சபை அதிகாரி ஒருவர் இத்தகவலை திருமலை பட்டணமும், சூழலும் பகுதி பிரதேச செயலர் அலுவலகத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.

கடற்படையினரின் பாதுகாப்புடனா? செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடனா? மீண்டும் சேவை ஆரம்பிக்கப்படும் என்பது குறித்த தகவல் இன்று வெளியிடப்படலாம் என்று திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

அதேசமயம் இந்தக் கப்பல் சேவையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் நடத்த பேச்சுக்கள் நடைபெறுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ள போதும், அப்பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்று சுயாதீனத் தகவல்கள் தெரிவித்தன. (இ-3-150)

## பெரியமடுவில் புலிகள் மீது தாக்குதல் என அறிவிப்பு

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் பெரியமடுவுக்கு வடகிழக்கில் மேற்கொண்ட நடவடிக்கையில் 7விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும்—

தொடர்ந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ரி-56 ரக துப்பாக்கிகள், நவீன தொலைத்தொடர்பு கருவிகள் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

## அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அரசு கருத்துக்கணிப்பீடு நடத்தும்

அரசு மேற்கொண்டுள்ள அபிவிருத்தித்திட்டங்கள், முன் வைத்துள்ள ஏனைய திட்டங்கள் ஆகியன தொடர்பாக மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை திரட்டும் வகையில் கருத்துக் கணிப்பீடு ஒன்றை நடத்த அரசு உத்தேசித்துள்ளது.

இது சம்பந்தமாக இன்னும் சில தினங்களில் அரசாங்கம் முடிவு ஒன்றை எடுக்கும்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள அமைச்சர் அலவி மௌலானர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்

## பொலீஸ் காவல்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒருமணிநேரம் நீடித்த இத்தாக்குதலில் ஒரு பொலீஸார் கொல்லப்பட்டார். மற்றொரு பொலீஸார் காயமடைந்தார்;

இத்தாக்குதலின் போது பொதுமகன் ஒருவரும், விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த புலி உறுப்பினரிடம் இருந்து ஒரு கிரனேட்டும் ஒரு ரி 81 ரக துப்பாக்கியும் ஒரு சைனைட் வில்லையும் கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸ் காவல் நிலையத்துக்குள் நுழைந்த விடுதலைப் புலிகள், ரி 56 ரக துப்பாக்கிகள் இரண்டையும், சாதாரண துப்பாக்கி ஒன்றையும், 2 இலட்சம் ரூபா பணத்தையும், பொலீஸ் சீருடைகளையும், சீருடைத்துணிகளையும், நோயாளர்களை எடுத்துச் செல்லும் ஸ்ரெச்சர்களையும் கைப்பற்றியதாகத் தெரிவித்தனர்.

அதன்பின் காவல் நிலையத்தையும், பொலீஸ் விடுதியையும் புலிகள் தீ வைத்துக் கொளுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — சின்னவத்தை அதிரடிப் படை முகாமில் இருந்து உதவிக்கு படையினர் வருவதைத் தடுக்க புலிகள் அந்த முகாம் மீது மோட்டார் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் சப்.இன்ஸ் பெக்டர் உட்பட இருபொலீஸார் காயமடைந்தனர்.

இத்தாக்குதலில் தமது தரப்பில் கப்டன் குளக்கோட்டன், லெப்டினன்ட் ஜெயராம், 2 ஆம் லெப்டினன்ட் ஜெயசோதி ஆகியோர் களப்பலியானதாகவும் —

ஏராளமான ஆயுத தளபாடங்களைத் தாம் கைப்பற்றியதாகவும் — 'புலிகளின் குரல்' நேற்றிரவு அறிவித்தது.

(இ-3-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 14-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org